DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 38/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டேவிட் சகாயம் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 21.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது கடினவயல் நடுக்காடு முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக பணியாற்றி வருகிறேன். நான் 05.09.2021 இரவு 8 மணி அளவில் எனது தகப்பனார் கடினவயலுக்கு அடுத்த தெருவில் மீன் பிடிக்க சென்ற போது திரவியம், தமிழ் ஆகிய 2 நபரகள் எனது தந்தையை அடித்து உட்காரவைத்திருந்தார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆட்டோவில் கருப்பம்புலம் அரசு மருத்துவமனையில் மருத்துவத்திற்காக கொண்டு சென்றோம். மருத்துவம் முடிந்து வீட்டிற்கு சென்றோம். மறுநாள் காலை மிகவும் முடியாமல் இருந்தது. பின்பு வேதாரண்யம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக நாகப்பட்டினம் சென்றோம். அங்கிருந்து திருவாரூருக்கு சென்றோம் அங்கு 09.09.2021 அ ன்று எனது தகப்பனார் காலமானார். இது தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தனர். அவர்களிடம் நடந்த விபரத்தை சொன்னோம். எனது தகப்பனாரை கொச்சை வார்த்தை கூறி, பறத்தேவடியா மகனே என்று கூறி அடித்த விபரத்தை விசாரணை அதிகாரியிடம் நான் வாக்குமூலமாக பதிவு

செய்தேன். நான் விசாரணை அதிகாரியிடம் கேட்டறிந்த வாக்குமூலத்தை தான் நான் இந்நீதிமன்றத்தில் சாட்சியமாக அளிக்கிறேன்.

**குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். கடினவயல் மாதா கோவில் உண்டியல் இருக்கும் தெரு வடக்கு தெற்காக செல்லும் சாலையில் கிழக்கு மேற்கு செல்கிற மாதா கோவில் ரோடு இணையும் இடத்தில் இருக்கிறது. சம்பவ இடத்திலிருந்து தெற்கே 1 கிலோ மீட்டர் தள்ளி என்னுடைய வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து 1 கி.மீ வடக்கே சம்பூலம் என்கிற மீன் பிடிக்கறி ஏரி உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ நடந்த நாளில் எனது தந்தையார் மது இரவு 8 மணிக்கு என் தாயாரிடம் சண்டை யிட்டு கொண்டு வடக்கே மீன் பிடிக்க செல்கிறேன் என்று கூறி சென்றால். சம்பவத்தன்று சம்பவ நேரத்தில் நல்ல மழை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடதில் வடக்கு தெற்காக செல்லும் பிரதான சாலையில் ரோட்டிற்கு மேற்புறம் கிழக்கு பார்த்து வெற்றி வீடு, ஜெரால்டு வீடு, ஜெரால்டு கடை எஸ்.எம். வீடு, பஞ்சமுத்து வீடு , சேகர் வீடு. மைக்கேல் வீடு, யோனஸ் வீடு, வேதரதத்தினம் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். அதே போல் வடக்கு தெற்காக செல்லும் சாலையில் கீழ்புறம் சம்பவம் நடந்தாக கூறும் இடத்திற்கு மிக அருகில் லுயிஸ் வீடு தெய்வா கடை, ரனால்டு வீடு, திலகேந்திரன் வீடு ஆகியவை ரோட்டிற்கு கீழ்புறம் மேற்கு பார்த்து அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லம்பபடும் இடத்தில் கிழக்கு மேற்காக செல்கிற மாதா கோவில் தெருவில் லுயிஸ் வீடு, சிவா வீடு, சகாயம் வீடு , ரோஜர் வெல்டிங் பட்டறை அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். ரோஜர் வெல்டிங் பட்டடறை என்பது டிராக்டரை சரி செய்கிற பட்டறை என்று சொன்னால் சரிதான். அந்த பட்டறை சம்பவ இடத்திற்கு 50 மீட்டர் தள்ளி வடபுறம் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான்.

சம்பம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் சம்பவம் நடந்த இடத்திற்கு 1கி.மீ

தள்ளி உள்ள எனது வீட்டில் எனது தந்தை, தாயார் மரியசெலவத்திடம் மது அருந்து விட்டு இரவு 8 மணிக்கு தகராறு செய்து விட்டு கோபித்து கொண்டு வீட்டை விட்டு சென்றார் என்று போலீஸ் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். எனது அம்மாவிற்கும், எனது அப்பாவிற்கு காது கேட்காது என்று போலீஸ் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் தெற்கே 1 கி.மீ உள்ள வீட்டில் இருக்கிறேன். என்னுடைய தந்தையை நான் 9 மணியளவில் தேட ஆரம்பித்தோம். நான் இரவு 9 மணிக்கு நான் எனது அப்பாவை தேடி கொண்டு மாதா கோவில் அருகே வந்து விட்டேன் என்று விசாரணையில் போலீஸிடம் சொல்லியிருக்கிறேன். சம்பவத்தன்று நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. சித்திரவேல் என்பவர் என்னிடம் வந்து தகவல் செல்லி தான் எனது தந்தை அடிப்பட்ட விபரம் எனக்கு தெரியும். சித்திரவேல் என்பவருடைய தந்தை பெயர் அஞ்சப்பன், காலனி தெரு, நடுக்காடு , கடினவயல் முகவரி என்றால் சரிதான். அவர் என் மைத்துனர் வீட்டு மகன். மேற்படி சித்திரவேல் வந்து சொல்லிதான் நான் இந்த வழக்கின் சம்பவம் பற்றி தெரிந்து கொண்டேன்.

என்னை 06.09.2021 அன்று காவல் துறை ஆய்வாளர், விசாரித்த போதும், 08.09.2021 அன்று காவல் துறை துணை கண்காணிப்பாளர் விசாரித்த போதும், நான் சம்பவத்தன்று மழை பெய்து கொண்டிந்துதாகவும், வீட்டில் இருந்ததாகவும், சித்திரவேல் , த/பெ. அஞ்சப்பன், காலனி தெரு, கடினவயல் என்பவர் என் விட்டிற்க்கு வந்து எனது தந்தையை மாதா கோவில் அருகே தாக்கவிட்டதாக தகவல் தெரிவித்ததன் பெயரில் நான் சம்பவ இடத்திற்கு வந்ததாக போலிஸிடம் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். எங்கள் ஊரில் இருந்து 3 கி.மீ வடக்கே கருப்பம்புலம் ஆரம்ப சுகாதர நிலையத்திற்கும், இரவு 10 மணிக்கு கருப்பம்புலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்த வைத்தியம் பார்ப்பவர்கள் எனது தந்தையை இரவு 10 மணிக்கு பார்த்தார்கள். அவருக்கு ஏற்பட்ட கா யத்ததையும் பார்த்தார்கள். அவரை அழைத்து கொண்டு செல்லும் போது இரு சக்கர வாகனத்தில்

அழைத்து செல்லவில்லை. வழக்கின் புகார்தாரர் எனது பெரியப்பா ஆவார். எனது பெரிப்பா பாலகிருஷ்ணனிடம் எனது தந்தையை இரு சக்கர வாகனத்தில் கருப்பம்புலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லவில்லை. கருப்பம்புலம் மருத்துவமனையிலிருந்து எங்கள் காவல் நிலையம் 7 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. மேற்சொன்ன இடங்களுக்கு இடையே நல்ல ரோடு வசதி அமைந்துள்ளது. சம்பவம் உண்மைஎன்றால் சம்பவத்தன்று நான் சென்ற ஆட்டோவிலே வேதாரண்யம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாததால் தான் அன்று இரவே நான் புகார் அளிக்கவில்லை என்றும், இந்த இரண்டு எதிரிகளையும் இந்த வழக்கில் பொய்யாக இணைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது எனது தந்தை போதையில் இருந்தார் . மறு நாள் மருத்துவமனைக்கு செல்லும் பொழுதும் எனது தந்தை மயங்கிய நிலையில் இருந்தார் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் 05.09.2021 இரவில் மாதாகோவில் உண்டியல் அருகே இந்த எதிரிகள் என்னுடைய தந்தையிடம் எந்த தகராறும் செய்யவில்லை என்றும், என் தந்தை சம்பவ நாளில் மதுவின் ஆழுகைக்கு உட்பட்டு என் வீட்டாரிடம் ஆரம்பித்து ஊரில் பலரிடம் தகராறு என்றும், யாரோ தந்த தவறான தகவலின் அடிப்படையில் இந்த எதிரிகளை தவறாக தொடர்பு படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 38/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மரியசெல்வம் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 21.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது கடினவயலில் வசித்து வருகிறேன். விசாரணையில் கேட்கிற கேள்வி எனக்கு காதில் விழுகிறது. கடந்த 05.09.2021 எனது கணவர் வேலை முடிந்து மாலை 6 மணிக்கு வீட்டிற்கு வந்தார். குளித்து விட்டு நான் சாப்பாடு கொடுத்தேன் அதை சாப்பிட்டார். அதன் பிறகு வடக்கே நான் வலை பேட்டேன் அதை பார்த்துவிட்டு நான் வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றவர் வரவில்லை. அவர் சென்றுரொம்ப நேரமாகியும் வீட்டிற்கு வரவில்லை என்று எனது மகனிடம் கூறினேன். அவர் பார்க்க சென்றார் . ஆஜர் எதிரிகளை பார்த்திருக்கிறேன் ஆனால் தெரியவில்லை. என்னுடைய வீட்டுக்ககாரர் அங்கு இருந்த 2 நபர்களை பார்த்து யார் என்று கேட்டார், அந்த நேரம் மழை வந்தது அப்பொழுது அந்த பகுதியில் போய் பாதுகாப்பாக இருக்கலாம் என்று சொல்லி அங்கு போயிருக்கிறார் . அப்பொழுது அங்கு எனது கணவரின் கைலியை அவிழ்த்து விட்டு ஓட , ஓட கம்பியால் தாக்கியுள்ளனர். யார் தாக்கினார்கள் என்ற விபரம் தெரியவில்லை. அதன் பிறகு அவரை எனது மகன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர் . அதன் பிறகு

வீட்டிற்கு அழைத்து வந்தனர். அதன் பிறகு அவர் எங்களிடம்பேசினார். மறு நாள் காலை அவர் முகம் வீங்கிய நிலையில் இருந்து. உடனே நாங்கள் ஆம்புலன்ஸை அழைத்து வேதாரண்யம் மருத்துமனைக்கு கொண்டு சென்றோம்., அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக நாகப்பட்டினம் மருத்துவமனைக்கும், அங்கிருந்து திருவாரூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு அவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். அங்கே அவர் காலமானார். அவர் இறந்த விபரத்தை எனது மகன் போனீல் என்னிடம் சொன்னார். இது தொடர்பாக என்னை போலீஸார் விசாரித்தார்கள். நான் நடந்த விபரத்தை போலீஸிடம் கூறினேன்.

**குறுக்குவிசாரணை**

நான் போலீஸிடம் 06.09.2021 அன்று காலை வேதாரண்யம் போலீஸார் என் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள் நான் கூறினேன். நான் சொல்ல சொல்ல அவர்கள் எழுதிகொண்டு படித்து காட்டி கையெழுத்து வாங்கி கொண்டார்கள். முதல் விசாரணையில் சொன்ன தகவலை தான் வேதாரண்யம் போலீஸிடம் நான்சொல்லியிருக்கிறேன். மனோகரன் ஐயா மது அருந்துவார் என்று சொன்னால் சரிதான். சம்பவத்தன்றும் அவர் மது அருந்தினார் என்று சொன்னால் சரிதான். சண்டைப்போடவில்லை. சம்பத்தன்று மது அருந்திவிட்டு எனது கணவர் என்னிடம் சண்டை போட்டதாகவும் அதை என் மகன்டேவிட் ராஜ் தினமும் இதே போல் சண்டை போடுறியே நல்லா இருக்கா என்று எனது கணவரிடம் கேட்டதாகவும், அதன் பிறகு மழை பெய்துது அவர் வெளியே சென்று விட்டார் என்று போலீஸில் கூறினேன் என்று சொன்னால் கூறவில்லை. மாதா கோவிலிலிருந்து வடக்கே 1 கி.மீ தள்ளி உள்ள சாம்பூலம் என்கிற ஏரிக்கு தான் எனது கணவர் சம்பவ நாளில் மீன் பிடிக்க சென்றார். சம்பவத்தன்று நல்ல மழையும், காற்றும் இருந்தது என்று சொன்னால் சரிதான். சம்பத்திற்கு இந்த எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், போலீஸார் என்னை சாட்சியமாக போட்ட காரணத்தினால் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 38/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமணி | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 21.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது கடினவயல் , நடுக்காடு முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னையும் அவர்களுக்கு தெரியும். 05.09.2021 அன்று இரவு 8 மணிக்கு எனது மாமனார் வேலை பார்த்துகொண்டு வீட்டிற்கு வந்தார். அவர் எப்பொழுதும் மது அருந்திவிட்டு வருவது வழக்கம். அன்றையதினமும் மது அருந்தியுள்ளார் . அதனால் எனது மாமியார் குழந்தை எல்லாம் தூங்குது சத்தம் போடாதீங்க என்று கூறினார் அதனால் அவர் கோபித்து கொண்டு வெளியில் சென்றார். சிறிது நேரம் கழித்து மழை வருவது போல இருந்தது. மாமா இன்னும் வீட்டிற்கு வரவில்லை என்று நானும் எனது மாமியாரும் எனது கணவரிடம் மாமாவை பார்த்து கூட்டு கொண்டு வாங்க என்று கூறினோரம். எனது கணவரும் உறவினரான தமிழ் மணியும் எனது மாமாவை அழைக்க போனார்கள். நான் இன்னும் காணவில்லை என்று செல்பேசியில் எனது கணவரை அழைத்தேன். அதற்கு அவர் அப்பாவை அடித்து உட்கார வைத்திருக்கிறார்கள் என்று எனது கணவர் கூறினார்.

அதன் பிறகு அவர் என்னை தொடர்பு கொள்ளவில்லை. அதன் பிறகு கருப்பம்புரம் அரசு மருத்துவமனைக்கு எனது மாமாவை அழைத்து சென்று விட்டு வீட்டிற்கு வந்தார்கள். அவர் முகம் வீங்கியுள்ள காரணத்தை நான் எனது மாமாவிடம் கேட்டேன் அதற்கு அவர் நான் மீன் பார்க்க சென்ற போது மழை வந்தது மழைக்க ஒதுங்க சென்றபோது அங்கு இரண்டு நபர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நான் யாருப்பா நீங்கள் பசுபதி தேவர் மகன் திரவியமா என்று தான் கேட்டேன் அதற்கு அவர்கள் என் அப்பா பெயரையா சொல்ற பறப்பயலே என்று எங்கள் சாதியை இழிவுப்படுத்தி பேசினார்கள். அதற்கு எனது மாமனார் கம்பியை எடுக்கும்பொழுது அவர்கள் இருவரும் அவருடைய தொண்டையை இறுக்கி அடித்துள்ளனர். உன்னைய கொல்லாமல் விடமாட்டேன் டா என்று தே நா, பூ நா என்று கெட்டவார்த்தையால் அவர்கள் எனது மாமனாரை திட்டியுள்ளனர். அதன் பிறகு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டு வீட்டில் தூங்க வைத்தோம். 06.09.2021 அன்று காலை என் மாமாவை எழும்பும் போது அவருக்கு சுயநினைவு இல்லை. அவர் முகம் வீங்கியநிலையில் இருந்தது. 108 க்கு நாங்கள் போன் செய்து வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சிகிச்சை மேற்கொள்ள முடியாது என்ற காரணத்தினால் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு சென்றோம். அங்கையும் பார்க்கமுடியாத காரணத்தினால் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். திருவாரூர் அரசு மருத்துவமனையில் 08.09.2021 அன்று காலை காலமானார் என்று தகவல் வந்தது. இது தொடர்பாக என்னை போலீஸார் விசாரித்தனர். அந்த தகவலை தான் இந்நீதிமன்றத்தில் சாட்யிமாக அளிக்கிறேன்.

<u>குறுக்குவிசாரணை</u>

போலிஸார் என்னை விசாரித்த பொழுது என் மாமனாரை என் வீட்டுக்காரர் தமிழ்மொழீயுடன் தேடிக்கொண்டு போனதாகவும் நான் என் அலைபேசியில் என் கணவருக்கு போன் செய்து மாமனாருக்கு என்ன ஆச்சு என்று கேட்டதாக போலீஸிடம் கூறினேன் என்று சொன்னால் சரிதான்.

என்னுடைய அலைபேசி எண் 8015995737 என் கணவர் நம்பர் 9843833187 ஆகும். இதை போலீஸிடம் கூறினேன். அவ்வாறு நான் கூறவில்லை என்றும், தற்போது அதை புகுத்துகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று இரவு 8 மணிக்கு செல்லும் பொழுது என் மாமனார் மது அருந்தி தான் சென்றிருந்தார் என்று சொன்னால் சரிதான். கருப்பம்புலம் மருத்துவமனைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வரும் போது இரவு 1.30-2.00 மணி இருக்கும் என்று சொன்னால் சரிதான் . சம்பவத்திலிருந்து மறு நாள் மருத்துவமனைக்கு செல்லும் வரையில் என் மாமனார் மயங்கிய நிலையில் தான் இருந்தார் என்றும், எதிரிகள் பற்றிய விபரம் கூறினார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என் மாமனார் மது அருந்திவிட்டு எங்கள் வீட்டிலிருந்தும் ஊரில் பல நபரிடம்மும் பிரச்சனை செய்வது வாடிக்கை என்றும் என் மாமனார் இறப்பிற்கும் இந்த எதிரிகளுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை, பொய்யாக தொடர்புபடுத்தி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.